# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 200 /பேரூ/2025**
**நாள் : 19.08.2025**

திரு. R. நடேசன்,
உடையார்பாளையம்,
அரியலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உடையார்பாளையம் பேரூராட்சி,
அரியலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், உள்கோட்டை அஞ்சல், வடக்கு தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. R. நடேசன் என்பவரது 13.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.06.2025 அன்று பெறப்பட்டு, 200/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், உள்கோட்டை அஞ்சல், வடக்கு தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. R. நடேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 13.06.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள 30.05.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"ஐயா நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். நாங்கள் சிறுபான்மையாக உள்ள தச்சர், கொல்லர் வகுப்பை சார்ந்தவர்கள்.

எனக்கு உடையார்பாளையம் கடை வீதியில் கட்டிடம் உள்ளது. இதனையொட்டி மெயின் தார் சாலையில் இருந்து பின்புறம் உள்ள தார்சாலை வரையில் பொது பாதை பூஸ்டர் அரசு பொது பாதை உள்ளது. இதன் சர்வே எண். 481/7.1. இதனையொட்டி நாசர் என்பவரின் மனையானது

சர்வே எண். 481/7 ஆக உள்ளது. இவர், இவரின் தம்பி ஜாகீர் இருவரும் புதிய R.C. பில்டிங் கட்டுகிறார். பாதையை குறுக்கியும் மேல் பீம் பாதைக்கு பாதிப்பாக போட்டும் வேலை செய்கிறார்.

1. எனது கட்டிடத்தில் உள்ள காம்பவுண்ட் சுவர் மற்றும் எனது கேட் அனைத்தையும் பாதிக்கப்படுவதால் நாங்கள் போலீஸில் புகார் அளித்தும் சிறிது கவலைப்படாமல் இடித்து எடுத்துள்ளனர்.

2. மேல் மட்டம் வரையில் புகார் கொடுத்தும் நாசர், ஜாகீருக்கு சாதகமாக செயல்படுகின்றனர். எதிர்தாரர் நாசரின் கட்டிடத்தின் வரைபடம், இதற்காக கட்டிய வரி வசூல் நகல் கேட்டு உடையார்பாளையம் பேரூராட்சியில் E.O. மற்றும் மணி ஆகியோருக்கு மனு கொடுத்தேன். இவர்கள் என்னை தொடர்பு கொண்டு நேரில் ஆபீஸ்க்கு வர சொன்னார்கள். நேரில் சென்றேன். E.O. மற்றும் மணி இருவரும் என்னை மிரட்டி உனது பில்டிங் உள்ள 481/9-ல் இடத்தை வேறு பெயருக்கு மாற்றி உனக்கு இடமே இல்லாமல் செய்து விடுவேன், நாசர், ஜாகீர் பெயருக்கே கூட இந்த இடத்தை மாற்ற என்னால் முடியும். உன்னை போலீஸில் பிடித்து ஜெயிலில் வைப்பேன் என்றும் என்னிடம் அரசியல் பணபலம் உள்ளது எனவும் மிரட்டி மிகவும் மோசமான கெட்ட வார்த்தைகளால் என்னை பேசிவிட்டனர். நான் மிகுந்த மனஉளச்சலில் மருத்துவமனைக்கு சென்று வருகின்றேன்.

தயவு செய்து நாசர் 481/7ல் உள்ள பில்டிங் வரைபடம், பணம் கட்டிய ரசீது நகல் பேரூராட்சியில் இருந்து கிடைத்து எனக்கு நல்ல தீர்ப்பு கிடைக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.06.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் உடையார்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. உடையாளர்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 26/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

உடையார்பாளையம் பேரூராட்சியில் புகார்தாரர் தெரிவித்துள்ள சர்வே எண். 481/7ல் வருவாய்த்துறை ஆவணங்களின்படி அந்த சர்வே எண்ணில் உள்ள நபர்கள் பயன்படுத்தும் பூஸ்திபாதை எனவும் அதனை பயன்படுத்தும் உரிமைதாரர்களுக்கு சொந்தமானது எனவும் மனைதாரர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் புகார்தாரருக்கு இந்த பூஸ்திபாதையில் எவ்வித உரிமையும் இல்லை எனவும் புகார்தாரருக்கு ஜெயங்கொண்டம் மெயின்ரோட்டில் பாதை உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். புகார்தாரர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் திரு. நாசர் அலி என்பவர் பெற்ற கட்டிட உரிமம் நகல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புகார்தாரர் தெரிவித்துள்ள பூஸ்தி பாதை தொடர்பாக திரு. நாசர் அலி என்பவர் புகார்தாரரை எதிர்த்து ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண். 272/2024ன்படி வழக்கு தொடர்ந்து வழக்கு தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

புகார்தாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி உடையார்பாளையம் பேரூராட்சி அலுவலக சம்பந்தமாக கோரியுள்ள பல தகவல் திரட்டுவதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அவரை நேரில் வந்து தெரிந்துகொள்ள கோரப்பட்டது. மேலும் அவரை நேரில் மிரட்டவோ வேறு எவ்வித மரியாதைக் குறைவான சொற்களோ அவரை சொல்லவில்லை என்பதனை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். புகார்தாரர் கோரியுள்ளவாறு 481/7-ல் உள்ள நாசர் அலி என்பவரின் கட்டிடத்திற்கு பேரூராட்சி மூலம் சொத்துவரி விதிப்பு செய்யப்படவில்லை என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியன கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. R. நடேசன் என்பவர் தனது 13.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் உடையார்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 481/7-ல் புதிய கட்டுமானப் பணியினை மேற்கொண்டுள்ள திரு. நாசர் மற்றும் அவரது சகோதரர் திரு. ஜாகீர் என்பவர்கள் பூஸ்தி பாதையை ஆக்கிரமித்து கட்டடம் கட்டி வருவதாக மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள நிலையில், உடையார்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 26/2025-ல் வருவாய்த் துறை ஆவணங்களின்படி, புல எண். 481/7-ல் உள்ள பூஸ்தி பாதையானது இப்புல உரிமையாளர்களுக்கு சொந்தமானது என தெரிவித்திருப்பது அறிய வருகிறது.

மேலும் திரு. நாசர் அலி என்பவர் புல எண். 481/7-ல் பூஸ்தி பாதையை ஆக்கிரமித்து கட்டடம் கட்டுவதாக புகாராக தெரிவித்துள்ள மனுதாரர் திரு. R. நடேசன் என்பவரை எதிர்த்து, ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். O.S. No. 272/2024) தொடுத்து, அவ்வழக்கானது சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxx xxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1952 or any matter pending before a Court.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் உடையார்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 481/7-ல், திரு. நாசர் அலி என்பவர் பூஸ்தி பாதையை ஆக்கிரமித்து கட்டடம் கட்டுவதாக தெரிவித்துள்ள புகாரினை எதிர்த்து திரு. நாசர் அலி என்பவரால் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் (O.S. No.272/2024) வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3)(b)ன்படி, இப்புகாரினை விசாரிக்க இயலாது என்பதால், இப்புகார்

தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R. நடேசன்,
வடக்குத் தெரு,
உள்கோட்டை அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 612 901.

2) செயல் அலுவலர்,
உடையார்பாளையம் பேரூராட்சி,
அரியலூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்